**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**CC.11/2023**

LW 4PW2

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரபோஷ் | | |
| Husband Name | முத்தார் | Calling | |
| Village | தெற்கு பொய்கைநல்லூர் | Religion | |
| Taluk | | Age | 42 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**29-01-2025**

**All Accused absent. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தெற்கு பொய்கைநல்லூரில் வசித்து இறால் பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா. 1 ஐ தெரியும். அவர் என் அண்ணி ஆவார். எதிரிகள் மூவரையும் தெரியும். கடந்த 8.10.2021 அன்று அ.சா.1ன் வீட்டு கொல்லையில் இருந்த கொத்தவரை செடியை எதிரிகளின் ஆடு தின்று விட்டது. அதனால் அந்த ஆட்டை கட்டி போட்டு சென்று விட்டார். எதிரி தெட்சிணாமூர்த்தி அ.சா. 1 இடம் ஏன் என் ஆட்டை கட்டி போட்டுள்ளீர் என்று கேட்டார். அதற்கு அ.சா. என் வீட்டு செடியை தின்று விட்டது- அதனால் உங்கள் ஆட்டை கட்டி வைத்து வளருங்கள் என்று கூறினார். மறு நாள் எதிரிகள் மூவரும் அ.சா. 1 வேலை செய்யும் இடத்தில் சத்தம் போட்டுள்ளார்கள். உடனே அ.சா. 1 வீட்டிற்கு வந்து விட்டார். பின்பு சுமார் 3 மணியளவில் எதிரிகள் மூவரும் அ.சா. 1 ன் வீட்டிற்குள் வந்து அவரை தேவுடியா மகளே, குச்சிக்காரி மகளே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டி தலை மற்றும் நெஞ்சில் அடித்தார்கள். எதிரிகள் மூவரும் அ.சா. 1ன் புடவை மற்றும் ஜாக்கெட்டை கிழித்தார்கள். சம்பவம் நடக்கும் நேரத்தில் நான் இறால் பண்ணையில்

இருந்தேன். அ.சா.1ன் பையன் எனக்கு போன் செய்து நடந்ததை கூறினான். நான் உடனே சம்பவ இடத்திற்கு வந்து அ.சா.1ஐ நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்த வழக்கில் நானும் அ.சா. 1ம் சாட்சி சொல்லக்கூடாது என்று எதிரிகள் மூவரும் எங்களை மிரட்டினார்கள். அது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**CC. 11/2023**

LW 1 PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | ரேவதி | | |
| Husband Name | ராஜ்குமார் | Calling | |
| Village | தெற்கு பொய்கைநல்லூர் | Religion | |
| Taluk | | Age | 42 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**29-01-2025**

**All Accused absent. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தெற்கு பொய்கைநல்லூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் மூவரையும் தெரியும். கடந்த 18.10.2021 அன்று என் வீட்டு கொல்லையில் இருந்த கொத்தவரை செடியை எதிரிகளின் ஆடு தின்று விட்டது. அதனால் அந்த ஆட்டை கட்டி போட்டு சென்று விட்டேன். எங்கள் கொல்லையில் தான் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எதிரி தெட்சிணாமூர்த்தி தேவுடியா மகளே, குச்சிக்காரி மகளே என்று கொச்சை வார்த்தைகளால் திட்டினார். அவர் என்னை அவ்வாறு திட்டியதால் எனக்கு அசிங்கமாக இருந்தது. அதனால் நான் உடனே வீட்டிற்கு சென்று விட்டேன். மறுநாள் 19.10.2021 அன்று நான் வீட்டிலிருந்தபோது எதிரிகள் மூவரும் வந்து என்னை தேவுடியா மகளே, குச்சிக்காரி மகளே என்று திட்டி, என்னை நெஞ்சில் குத்தி மிதித்தார்கள். என் தலையில் எதிரிகள் மூவரும் குத்தினார்கள். அதில் என் தலை மற்றும் நெஞ்சில் வீக்கம் ஏற்பட்டது. அருகில் இருந்த மகேந்திரன், தேவேந்திரன் சமாதானம் செய்ய வந்தார்கள். உடனே எதிரிகள் அங்கிருந்து சென்று விட்டார்கள். என் கணவரின்

தம்பி சந்திரபோஷ் என்னை நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் மருத்துவமனையிலிருக்கும்பொழுது வேளாங்கண்ணி போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா. ஆ- 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது-

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.